நாள் - 24.03.2023

**C.C. No**.106/2019

**எ.மா.சா.2-சின்னசாமி, த/பெ. வடிவேல்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 24**th day of March** 2023.

குறுக்கு விசாரணை

1. எதிரியின் அண்ணன் விஜயகுமார் எனக்கும் மற்றொரு சின்னசாமிக்கும் தான் 09.08.2017 ம் தேதி அடமானம் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் ரூ.14,65,000/-தன்னுடைய குடும்ப செலவிற்காக விஜயகுமார் பல தவணைகளில் ரொக்கமாக பெற்றதாக எழுதப்பட்டது என்றால் சரிதான். அப்பத்திரத்தில் சுதா கூறியதன் பெயரில் அப்பத்திரம் எழுதப்பட்டதாக ஏதாவது குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு இல்லை. வாய்மொழியாக கூறியதுதான்.

2. எதிரி ராஜேஷ்குமார் பத்திரத்தை வைத்து நானோ மற்றொரு சின்னசாமியோ அடமான பத்திரம் ஏதாவது எழுதியுள்ளோமா என்றால் எழுதவில்லை. முதல் விசாரணையில் எதிரியினுடைய பத்திரத்தை வைத்து அடமான பத்திரம் எழுதியதாக சாட்சியம் அளித்திருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

3. எதிரியின் அண்ணன் கடன் பெற்றதற்காக தான் மேற்படி பத்திரம் எழுதப்பட்டது என்றாலும் ஆனால் வழக்கிற்காக சுதா கூறியதன் பெயரில் மேற்படி அடமான பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 09.08.2017 ம் தேதியிட்ட அடமானம் பத்திரத்தில் ரூ.14,65,000/-பெற்ற விபரம் எதிரியின் வழக்கறிஞர் வழங்கிய நகல் ஆவணத்தின் பெயரில் தான் கூறிய வகையில் தான் மனுதாரருக்கு அது தெரியவந்தது என்றால் அது எனக்கு தெரியாது.

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2023.03.24 18:00:08 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**